# பத்திரிக்கைச் செய்தி

## பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் சமையலர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

கடலூர் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் (ஊதியஏற்ற முறை நிலை-1 (15700-50000) மற்றும் இதரபடிகள்) சமையலர் (ஆண்) பணியிடங்கள் - 34 மற்றும் சமையலர் (பெண்)- பணியிடங்கள் - 24 நிரப்புவதற்கு பின்வரும் தகுதி உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

## தகுதிகள்

**1.தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். 2. சைவ மற்றும் அசைவ உணவு வகைகள் தரமாகவும், சுவையாகவும் சமைக்கத் தெரிந்திருக்க வேண்டும். 3. வயது வரம்பு 01.07.2020 தேதியில் SC/ST- 18 முதல் 35 , BC, BCM, MBC & DNC - 18 முதல் 32 , இதர பிரிவினர் 18 முதல் 30 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். இப்பிரிவுகளில் முன்னுரிமை உள்ளவர் /முன்னுரிமையற்றவர் ஆகியோர் விண்ணப்பிக்கலாம். அரசு விதிமுறைகளில் அனுமதிக்கப்பட்டவாறு வயது வரம்பில் தளர்வு அளிக்கப்படும்.**

மேற்படி தகுதிகளுடன் கடலூர் மாவட்டத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் , மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் கல்வி விடுதிகளில் முழுநேர சமையலர் பணியிடத்தில் பணிபுரிய விருப்பம் உள்ளவர்கள் **www.cuddalore.nic.in** என்ற இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ள விவரங்களை அறிந்து விண்ணப்ப படிவத்தினை பதிவிறக்கம் செய்து உரிய சான்றுகளின் நகல்களை

இணைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்நலஅலுவலர் , மாவட்டஆட்சியர் அலுவலகம், கடலூர்-607 001 என்ற முகவரிக்கு 18.09.2020 அன்று மாலை 5.45 பிற்பகல் மணிக்குள் வந்து சேரும் வகையில் விண்ணப்பிக்க வேண்டும். காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
கடலூர்.